தமிழ்நாடு அரசு
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை
வட்டாட்சியர் அலுவலகம், திருப்பூர் தெற்கு வட்டம்,
திருப்பூர் மாவட்டம்.

அறிவிக்கை எண்.2096/2025/A3

நாள்.09.07.2025

திருப்பூர் மாவட்ட வருவாய் அலகில், திருப்பூர் தெற்கு வட்டத்தில் காலியாக உள்ள 5 கிராம உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இடஒதுக்கீடு, கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட நபர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் பெறப்படும் நாள். 09.07.2025 முதல் (அலுவலக வேலை நேரங்களில் மட்டும்)

விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள். 08.08.2025 மாலை 5.45 மணி வரை
எழுத்து தேர்வு நாள். 06.09.2025 – (மாறுதலுக்கு உட்பட்டது).
நேர்முக தேர்வு நாள். 22.09.2025 – 26.09.2025 (மாறுதலுக்கு உட்பட்டது).
சம்பள விகிதம் : சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.11,100 – 35,100/-

பணி நிரப்பப்படவுள்ள கிராமத்தின் பெயர் விவரம்.

1. நல்லூர். 2.நாச்சிபாளையம், 3.கரட்டுப்பாளையம், 4.பெரியாரிபட்டி, 5.வெள்ளியம்பாளையம்.

இனசுழற்சி

| வ.எண். | இன சுழற்சி | இனம் | முன்னுரிமை /முன்னுரிமையற்றவர் | பொது./ஆண் /பெண் | முன்னுரிமை பிரிவு |
|---|---|---|---|---|---|
| 01. | 09 | GT | முன்னுரிமையற்றவர் | பொது | – |
| 02 | 10 | BC | முன்னுரிமையற்றவர் | பொது | – |
| 03 | 11 | GT | முன்னுரிமையற்றவர் | பொது | – |
| 04 | 12 | SC | முன்னுரிமையற்றவர் | பெண் | ஆதரவற்ற விதவை |
| 05 | 13 | MBC/DNC | முன்னுரிமையற்றவர் | பொது | – |

கல்வித் தகுதி

1. 10–ஆம் வகுப்பில் தேர்ச்சி அடைந்தவர்களும், தோல்வி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். தமிழ் மொழியை கட்டாய பாடமாக கொண்டு 10–ஆம் வகுப்பு தேர்வு எழுதியிருக்க வேண்டும்.
2. 10 – ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் (தேர்ச்சி/தோல்வி) வைத்திருக்க வேண்டும்.
3. மேலும், தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
4. அரசாணை எண்.122, மனிதவள மேலாண்மைத் (கே.2) துறை நாள் 02.11.2021,

இதர தகுதிகள்

1. விண்ணப்பதாரர் திருப்பூர் தெற்கு வட்டத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும்.
2. தேர்வு செய்யப்படுபவரின் நடத்தை குறித்தும் முந்தைய குற்றப் பின்னணி குறித்தும் நியமன அலுவலர் அறிந்து திருப்தி அடைய வேண்டும்.
3. அடிப்படை விதி 10 இன் படி உடற்தகுதி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
4. மிதிவண்டி ஓட்ட தெரிந்திருக்க வேண்டும்.

இருசக்கர மோட்டார் வாகன ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பின் (மிதிவண்டி ஓட்ட தேர்வு நடத்த தேவையில்லை)

| வயது வரம்பு | | |
|---|---|---|
| | குறைந்தபட்ச வயது | 21– வயது (அனைத்து பிரிவினருக்கும்) (01.07.2025 அன்று 21 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.) |
| | அதிகபட்ச வயது | 32* வயது (பொதுபிரிவினர்) 37* வயது – பிற்படுத்தப்பட்டோர் / பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பட்டியல் வகுப்பினர், பட்டியல் வகுப்பினர்(அருந்ததியர்) / பழங்குடியினர். |
| | மாற்றுத் திறனாளிகளுக்கு | அதிகபட்ச வரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதலாக தளர்வு வழங்கப்படும். |

| | | |
|---|---|---|
| | முன்னாள் இராணுவத்தினருக்கு | 50 வயது – பொதுபிரிவினர்<br>55 வயது – பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பட்டியல் வகுப்பினர், பட்டியல் வகுப்பினர்(அருந்ததியர்) /பழங்குடியினர்.<br><br>(* அரசாணை (நிலை) எண். 91, மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள். 13.09.2021–இன்படி வயது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது) |
| **விண்ணப்பிக்கும் முறை** | கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை திருப்பூர் மாவட்டத்தின் அதிகாரப்பூர்வமான இணையதளமான https://tiruppur.nic.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களுடன் திருப்பூர் தெற்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ அனுப்பப்பட வேண்டும். | |

**வட்டாட்சியர் அலுவலக முகவரி**

வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்பூர் தெற்கு.

வருவாய் வட்டாட்சியர்,
திருப்பூர் தெற்கு.